# அவசர கூட்டப்பொருட்கள்

1. அரசால் சட்டப்பேரவை அறிவிப்பாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் பணியாற்றி வரும் நிரந்தர துாய்மை பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த துாய்மை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) அரசாணை (நிலை) எண்.60, நாள்.03.06.2020-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நாகர்கோவில் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர துாய்மை பணியாளர்கள், ஒப்பந்த துாய்மை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின்படியும், மாநகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுரையின்படியும் வருகின்ற 26.11.2020 அன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை SLB மேல்நிலைப்பள்ளியில் வைத்து மருத்துவ முகாம் நடைபெற உள்ளது. மேற்படி மருத்துவ முகாமிற்கு தேவையான மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், உணவு மற்றும் இதர செலவினங்களுக்கு உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.10327/2020/எச்1

**தீர்மானம் எண்.534 – அங்கீகரிக்கப்பட்டது**

2. துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நகரமாக மாற்ற மத்திய நகர்புற வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்த நடைமுறைகள்படி இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட 52 வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதியாக அறிவிப்பு செய்து மாமன்றத்தீர்மான எண்.530, நாள்.02.11.2020-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக பொதுமக்கள் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தெரிவிப்பது குறித்தும் 04.11.2020-ல் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்நாள் வரை ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை. எனவே இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 52 க்குட்பட்ட பகுதிகளையும் திறந்தவெளி கழிப்பிடம் இல்லையென அறிவிப்பு செய்ய அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.13258/2016/எச்1

**தீர்மானம் எண்.535 – அங்கீகரிக்கப்பட்டது**

3. நாகர்கோவில் மாநகராட்சி பகுதிகளில் மனிதக்கழிவுகளை மனிதனே அகற்றும் தடைச்சட்டம் -2013 ன் படி நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றறிக்கை ந.க.எண்.27869/கே2/2019 –ல், நாள்.02.12.2019–ன் படியும் நடைமுறைப்படுத்துவதற்கு, இம்மாநகராட்சி பகுதிகளில் இயக்கப்படும் கழிவு நீர் வாகனங்கள் முறையாக மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு பதிவு செய்யப்படவேண்டும் எனவும், மாநகராட்சி விதிமுறைகளை மீறி இயக்கப்படும் கழிவு நீர் வாகனங்களுக்கு அபராதத்தொகை வசூலிக்கப்படும் எனவும் கழிவு நீர் வாகன உரிமையாளர்களுக்கு 28.02.2020–ல் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி அறிவுரைகளின்படி செயல்படாத கழிவு நீர் வாகன உரிமையாளர்களுக்கு கீழ்கண்டுள்ளபடி அபராதத்தொகை வசூலிக்கவும் அதற்குண்டான இதர செலவினங்களுக்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பாதுகாப்பு உபகரணங்கள் முறையாக இல்லாமல் இருந்தது | 1000 ரூ. |
| 2. | பணியாளர் மற்றும் ஓட்டுநருக்கு காப்பீடு உரிமம் இல்லாமல் இருத்தல் | 500 ரூ. |
| 3. | மாநகராட்சியில் பதிவு செய்யாமல் இருத்தல் மற்றும் மாநகராட்சிக்கு தகவல் தெரிவிக்காமல் பணி செய்தல் மற்றும் மாலை 6 மணிக்கு மேல் பணி செய்தல் | 5000 ரூ. |

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.324/2014/எச்1

**தீர்மானம் எண்.536 – அங்கீகரிக்கப்பட்டது**

4. இம்மாநகராட்சிக்குட்பட்ட தர்மபுரம் வடக்கு கிராமம், புல எண்.100/2C, 2D,3C,4B, 4C இல் 2.32 ஏக்கர் பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க கேட்டு திரு.Rலிங்கராஜன் மற்றும் லதாவதி என்பவர்கள் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு விண்ணப்பம் செய்ததில் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1198/2020 நாஉதிகு, நாள்.07.10.2020 இன் படி மேற்படி மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலை பரப்பளவு 2391.27 ச.மீ மனையையும், பொது ஒதுக்கீடு பரப்பளவு 36.20 ச.மீ மனையையும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் விபரம் தெவிக்க கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை திருப்திகரமாக அமைக்கப்பட்டுள்ளதாகவும், குடிநீர் குழாய் மற்றும் தெருவிளக்கு வசதிகள் செய்திட ரூ.1,20,000/- மனை உரிமையாளர்களால் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும் என தெரிவித்து மாநகர பொறியாளர் தமது 18.10.2020 ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் மனைப்பிரிவில் அமையும் சாலைப்பரப்பளவு 2391.27 ச.மீ மனையையும் பொது ஒதுக்கீடான 36.20 ச.மீ மனையையும் மாநகராட்சியின் பொறுப்பிற்கும், பராமரிப்பிற்கும் ஏற்றெடுக்க மாமன்ற தீர்மானம் எண்.502, நாள்.29.10.2020 இன் படி மாமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மனை உரிமையாளர்களால் குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகள் செய்திட ரூ.1,20,000/- மாநகராட்சி கருவூலத்தில் 05.11.2020 இல் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் அமையும் சாலை பரப்பளவு 2391.27 ச.மீ மனையையும், பொது ஒதுக்கீடு பரப்பளவு 36.20 ச.மீ மனையையும் ஆணையாளர் பெயருக்கு நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் எண்.3313/2020, நாள்.05.11.2020 இன் படி தானப்பத்திரம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட மனைப்பிரிவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/நா.உதிகு எண்.08/2020 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், மேற்கண்ட மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 இன் பிரிவு 49 இன் கீழ் திட்ட அனுமதி எண்.தி.அ/ம.வ/நாஉதிகு எண்.14/2020 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட புல எண்.100/2C, 2D,3C,4B, 4C இல் 2.32 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்க அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> - அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.6669/2020/எப்1

**தீர்மானம் எண்.537 - அங்கீகரிக்கப்பட்டது**

5. இம்மாநகராட்சிக்குட்பட்ட தர்மபுரம் வடக்கு கிராமம், புல எண்.100/2A, 2B,3A,3B, 4A இல் 8622 ச.மீ. (2.13 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க கேட்டு திரு.சுயம்புலிங்கம் மற்றும் இருவர் என்பவர்களால் கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநருக்கு விண்ணப்பம் செய்ததில் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1197/2020 நாஉதிகு, நாள்.07.10.2020 இன் படி மேற்படி மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலை பரப்பளவு 2009.89 ச.மீ மனையையும், பொது ஒதுக்கீடு பரப்பளவு 33.99 ச.மீ மனையையும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து அதன் விபரம் தெவிக்க கோரப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை திருப்திகரமாக அமைக்கப்பட்டுள்ளதாகவும், குடிநீர் குழாய் மற்றும் தெருவிளக்கு வசதிகள் செய்திட ரூ.90,000/- மனை உரிமையாளர்களால் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும் என தெரிவித்து மாநகர பொறியாளர் தமது 19.10.2020 ஆம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் மனைப்பிரிவில் அமையும் சாலைப்பரப்பளவு 2009.89 ச.மீ மனையையும் பொது ஒதுக்கீடு பரப்பளவு 33.99 மனையையும் மாநகராட்சியின் பொறுப்பிற்கும், பராமரிப்பிற்கும் ஏற்றெடுக்க மாமன்ற தீர்மானம் எண்.503, நாள்.29.10.2020 இன் படி மாமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மனை உரிமையாளர்களால் குடிநீர் மற்றும் தெருவிளக்கு வசதிகள் செய்திட ரூ.90,000/- மாநகராட்சி கருவூலத்தில் 05.11.2020 இல் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் அமையும் சாலை பரப்பளவு 2009.89 ச.மீ மனையையும், பொது ஒதுக்கீடு பரப்பளவு 33.99 மனையையும் ஆணையாளர் பெயருக்கு நாகர்கோவில் சார் பதிவாளர் அலுவலகத்தில் தானப்பத்திரம் எண்.3293/2020, நாள்.05.11.2020 இன் படி தானப்பத்திரம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட மனைப்பிரிவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ/நா.உதிகு எண்.07/2020 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், மேற்கண்ட மனைப்பிரிவிற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 இன் பிரிவு 49 இன் கீழ் திட்ட அனுமதி எண்..தி.அ/ம.வ/நாஉதிகு எண்.13/2020 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதியும் வழங்கி கன்னியாகுமரி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.1197/2020 நாஉதிகு, நாள்.12.11.2020 இன்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட புல எண்.100/2A, 2B,3A,3B, 4A இல் 8622 ச.மீ. (2.13 ஏக்கர்) பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுடன் இறுதி ஒப்புதல் வழங்க அங்கீகாரத்திற்காக.

<u>அலுவலக குறிப்பு</u> – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.6670/2020/எப்1

**தீர்மானம் எண்.538 – அங்கீகரிக்கப்பட்டது**